Australian Government
Aged Care Quality and Safety Commission

Engage
*Empower*
**Safeguard**

# ‘முதியோர் பராமரிப்புத் தரம் மற்றும் பாதுகாப்பு ஆணையம்’ (Aged Care Quality and Safety Commission) என்பது என்ன?



**‘முதியோர் பராமரிப்புத் தரம் மற்றும் பாதுகாப்பு ஆணைய’த்தில், ஆஸ்திரேலிய அரசாங்க நிதியுதவி பெறும் முதியோர் பராமரிப்புச் சேவைகளைப் பயன்படுத்தும் சனங்களைப் பாதுகாப்பதே எங்கள் பணியாகும்.**

நீங்கள் முதியோர் பராமரிப்புச் சேவைகளைப் பெறும்போது, பின்வருவனவற்றிற்கான உரிமைகள் உங்களுக்கு உண்டு:

- கண்ணியம் மற்றும் மரியாதை
- உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பாதுகாப்பான மற்றும் தரமான பராமரிப்பு.

சேவைகள் மிகச் சிறந்த கவனிப்பை வழங்குவதையும், ‘உரிமைகள் கூற்’றிற்கு இணங்க சேவைகளை அளிப்பதையும் உறுதிசெய்ய நாங்கள் உதவுகிறோம்.

இதை நாம் பின்வருமாறு செய்கிறோம்:

- முதியோர் பராமரிப்புச் சேவைகளை வழங்க வழங்குநர்களைப் பதிவு செய்தல்
- சேவைகள் முதியோர் பராமரிப்புத் தரநிலைகளைப் பூர்த்தி செய்கின்றனவா என்பதைச் சரிபார்த்தல்
- வழங்குநர்களும் பணியாளர்களும் ‘முதியோர் பராமரிப்பு நடத்தைக் கோட்பா’(Aged Care Code of Conduct) ட்டிற்குஇணங்க நடந்துகொள்வதை உறுதி செய்தல்.
- முதியோர் பராமரிப்பு சேவைகள் தொடர்பான புகார்களை விசாரித்தல்.
- தரநிலைகளைப் பூர்த்தி செய்யாவிட்டால் அல்லது சனங்களின் உரிமைகளை மதிக்காவிட்டால், தம்மை மாற்றிக்கொள்ளுமாறு சேவை வழங்குநர்களைக் கோருதல்
- வழங்குநர்கள் கட்டணங்கள், பங்களிப்புகள் மற்றும் நிதியுதவிகளை முறையாக நிர்வகிப்பதை உறுதி செய்தல்
- வருங்கால புதிய முதியோர் பராமரிப்பு நிறுவனங்கள்தகுந்தவை என்பதை உறுதி செய்தல்
- கடுமையான சம்பவங்களை விசாரித்தல்
- நாங்கள் கண்டறிந்துள்ள விடயங்களைப்பற்றிய தகவல்களை வெளியிடுதல்
- நல்ல கவனிப்பு என்பதன் பொருள் என்ன என்பதையும், சேவைகளிடமிருந்து என்ன எதிர்பார்க்கலாம் என்பதையும் விளக்குதல்.

எங்கள் பணி பெரும்பாலான முதியோர் பராமரிப்பு சேவைகளை உள்ளடக்கியது, ஆனால் ய்வுற்றோர் குடியிருப்புகளை ஓஉள்ளடக்காது.

## எம்மால் உங்களுக்கு எப்படி உதவ முடியும்?

இந்த 'உரிமைகள் கூற்று', பின்னூட்டம் வழங்குவதற்கும், புகார் அளிக்கவும் உங்களுக்குள்ள உரிமையைப் பாதுகாக்கிறது. *'முதியோர் பராமரிப்புச் சட்டம் 2024' (Aged Care Act 2024)*-இல் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த 'உரிமைகள் கூற்று', முதியோர் பராமரிப்புச் சேவைகளைப் பெறும்போது உங்களுக்கு உள்ள உரிமைகள் என்ன என்பதை விவரிக்கிறது.

உங்கள் பராமரிப்புக் குறித்து உங்களுக்கு ஏதேனும் கவலை இருந்தால், அதைச் சரிசெய்ய உங்களுடன் இணைந்து செயல்படுமாறு உங்கள் சேவை வழங்குநரிடம் நீங்கள் கோரலாம்.

உங்கள் சேவையில், பின்னூட்டங்கள் மற்றும் புகார்களுக்குப் பதிலளிப்பதற்கான ஒரு செயல்முறை அவசியம் இருந்தாக வேண்டும். உங்கள் கவலைகள் மீது நடவடிக்கை எடுக்க அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை அவர்கள் உங்களுக்குத் தெரிவிக்க வேண்டும். நீங்கள் புகார் செய்ததற்காக அவர்களால் உங்களை வித்தியாசமாக நடத்த இயலாது.

எங்களிடம் இலவசப் புகார் சேவை ஒன்று உள்ளது. உங்கள் கவலைகளுக்கு சேவை வழங்குநர் பதிலளித்த விதம் உங்களுக்குத் திருப்தியளிக்கவில்லை என்றால், நீங்கள் எங்களிடம் பேசலாம். உங்கள் சேவை அல்லது உரிமைகள் குறித்தும் நீங்கள் எங்களிடம் கேள்விகள் கேட்கலாம்.

நாங்கள் பின்வருவனவற்றின் மூலம் உதவுவோம்:

- உங்களுக்குச் செவிசாய்த்தல்
- உங்களுக்குச் சரியான தகவல்களை வழங்குதல்
- உங்களுடனும் உங்கள் சேவையுடனும் இணைந்து கவலைகளுக்குத் தீர்வு காணப் பணியாற்றுதல்

உங்கள் குடும்ப உறுப்பினர், நண்பர் அல்லது வழக்கறிஞர் ஒருவரை உங்களுக்காக எங்களுடன் தொடர்புகொள்ள நீங்கள் அவருக்கு அனுமதி வழங்கலாம். நீங்கள் விரும்பினால், உரையாடல்கள் இரகசியமானவையா அல்லது அநாமதேயமானவையாக இருக்கலாம்.

நீங்கள் தொலைபேசி, இணையப் படிவம், மின்னஞ்சல் அல்லது அஞ்சல் மூலமாக எங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

## வேறு எங்கே நீங்கள் உதவி பெறலாம்?

ஒரு சுயாதீன முதியோர் பராமரிப்பு ஆலோசகரின் உதவியை நீங்கள் நாடலாம். ஒரு ஆலோசகரால்:

- உங்கள் உரிமைகளைப் புரிந்துகொள்ள உங்களுக்கு உதவ இயலும்
- முதியோர் பராமரிப்புப் பிரச்சினை குறித்து உங்கள் சேவை வழங்குநரிடம் பேச உங்களுக்கு உதவ இயலும்
- எங்களுடன் புகார்களை எழுப்ப இயலும்
- உங்கள் முதியோர் பராமரிப்புப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண இயலும்.

'முதியோர் பரிந்துரை ஆதரவு வலையமைப்'((Older Persons Advocacy Network))பின் இணையதலத்தைப் பார்வையிடுவதன் மூலமாக அல்லது **1800 700 600** என்ற எண்ணில் அவர்களை அழைப்பதன் மூலமாக நீங்கள் இலவச மற்றும் இரகசிய உதவியைப் பெறலாம்.

**'உரிமைகள் கூற்று'**
agedcarequality.gov.au/older-people/your-rights

**'முதியோர் பராமரிப்புத் தரநிலைகள்'**
agedcarequality.gov.au/older-australians/your-rights/aged-care-quality-standards

**'முதியோர் பராமரிப்புத் தரம் மற்றும் பாதுகாப்பு ஆணையம்'**
agedcarequality.gov.au/contact-us

**'முதியோர் பரிந்துரை வலையமைப்பு' வலைத்தளம்**
opan.org.au

**முதியோர் பராமரிப்பு நடத்தைக் கோட்பாடு'**
agedcarequality.gov.au/older-people/your-rights/aged-care-code-conduct

1800 951 822
agedcarequality.gov.au
உங்கள் தலைநகரில் Aged Care Quality and Safety Commission GPO Box 9819

**இந்த வளத்தை இணையத்தில் காணுங்கள்**
agedcarequality.gov.au/resource-library/what-aged-care-quality-and-safety-commission-fact-sheet